# தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி௵ மாசி௴ 21௳ (4-3-'23.) | ப. 43.


விஷய அடக்கம்.


1. உலக நடை ... 441
(உதவி பத்திராதிபர்)
2. வட இந்தியாவிலுள்ள சில புண்ய க்ஷேத்திரங்கள் ... 442
[K. R. R. சாஸ்திரி, M. A. F. R. Econ. S.]
3. நாவல் உலகு ... 443
[C. S. பம்பாபதி சாஸ்திரி, B. A., B. L.,]
4. புயற் காற்று ... 444
V. [நாராயணையர், M.A., M.L.,]
5. சன்மார்க்க அஷ்டகம் ... 447
[K. N. சிவராஜ பிள்ளை.]



## தமிழ் உலகு

(THE TAMIL WORLD)

ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவரும்

தமிழ் வாரப் பத்திரிகை

பத்திராதிபர், S. பட்டாபிராமன், M. A.

சந்தா விவரம் :—

| உள் நாடு. | வெளி நாடு. |
|---|---|
| ½-வருஷம் ரூ. 3 0 0 | ½-வருஷம் ரூ. 3 8 0 |
| 1-வருஷம் ரூ. 5 0 0 | 1-வருஷம் ரூ. 6 0 0 |

'தமிழ் உலகு' கார்யாலயம்

16, பசுபதி அக்கிரஹாரம்,

மைலாப்பூர், சென்னை.


## உலக நடை

[உதவி பத்திராதிபர்.]

நம் இந்தியா தேசத்தைத் தவிர மற்றதேசங்களெல்லாம் சுயராஜ்ஜியம் பெற்று விட்டன. ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாலேயே ஜனங்களுக்கு அடங்கிய அரசாங்க நிர்வாகம் எல்லா நாடுகளிலும் நடைபெறுகின்றது. இந்தியா மட்டும் சுயராஜ்ஜியம் பெறவில்லை. இதன் பலனாக இதர நாடுகளிலும் நம்தேசத்திலும் இந்தியரின் தன் மதிப்புக்கு மாறான காரியங்களே நடந்தேறுகின்றன, கெனியாவில் இந்தியர் படும் துன்பங்களுக்கும் கௌரவக் குறைவுக்கும் அளவே யில்லை. மற்ற குடியேற்ற நாடுகளிலும் இந்தியர் என்ற பெயருடன் எவனாவது காணப்பட்டால் அவனுடைய நிலைமை கீழ்ப்பட்டதே. அமெரிக்கா போன்ற வேற்று நாடுகளிலும் சுதந்தரத்துடன் இந்தியர் வாழ முடியாது. சுதந்தரத்தை இழந்து அடிமைத் தொழிலாவது கூலி வேலையாவது செய்வதானால் சில ஸமயங்களில் இந்தியரை எங்கும் வரவேற்பார்கள்.

* * *

நமக்கு பிறர் நியாயமான மரியாதை செய்யாமலிருந்தால், நாமும் பிறருக்கு மரியாதையை மறுத்து நம் நிலையை சீர்படுத்திக் கொள்ளுவதே உலக வழக்கம். இவ்விதம் இந்தியர்களை மானபங்கம் செய்யும் மானிடவர்க்கத்தினருக்கு பாடம் கற்பிக்க நம்மால் இயலுமோ. இந்திய சட்டஸபை அங்கத்தினராக வீற்றிருக்கும் நம் சகோதரர்களுடைய வன்மை நம்முடைய சுயமதிப்பைக் காக்கக் கூடுமோ? நம்முடைய கௌரவத்தை பாதுகாக்க முடியாத நம் அரசாங்கத்தை நமது அரசாங்கமெனவும் சொல்லத்தகுமோ? இந்திய சீர்திருத்தச் சட்டத்தைப் போற்றும் நம்மவர்களின் வீண் பிரமையை என்னென்று சொல்வது. இவையெல்லாவற்றையும் கண்டு கொண்டே ஒத்துழையாதார் அரசாங்க ஸ்தாபனத்தை இந்தியரின் மதிப்பையும் முன்னேற்றத்தை காக்கக் கூடிய நிலையில் நாட்ட முயன்று வருகிறார்கள்.

* * *

ஒத்துழையாதாரில் கட்சிப் பிளவேற்பட்டிருந்ததை நீக்கி விட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. சமரஸ முடிவை கவனிக்கும்போது இந்த கட்சிப்பிளவை மறுபடி இரண்டு மாதங் கழித்து துவக்க நோக்கங் கொண்டிருக்கிறார்களெனத் தோன்றுகிறது. ஒரே நோக்கத்துடன் எல்லோரும் ஒன்று சேர்ந்து உழைக்காததால் தான் சுயராஜ்ஜியம் நமக்கு கிடைக்கவில்லை. இனியும் நிலையை உள்ளவாறு அறியாமல் அவரவர் வெவ்வேறு அபிப்பிராயம் பூண்டு நடந்து கொண்டால் ஒரு நன்மையும் விளையாது. ஒன்று சேர்ந்து பொ


சென்னை ஜார்ஜ் டவுன் ஸ்டிரிங்கர்ஸ் தெரு, டையமெண்டு அச்சுக்கூடத்தில் ஆர். வெங்கிடாசலம் செட்டியாரால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16, 'தமிழ் உலகு' கார்யாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.

றுமையுடனும் தியாகபுத்தியோடும் அரசாங்க ஸ்தாபன நிர்மாண வேலைகளில் ஈடுபட்டும் நடப்பதானல் சுயராஜ்ஜியம் ஸித்தியாகும். ஒத்துழையாதாரில் சிலருக்கு பொறுமை என்ற குணம் குறைவாகக் காண்கிறது. நமக்கு எதிரான அபிப்பிராயம் பூண்டவர்களை நிந்தித்து அவர்களை விரோதிகளாக செய்து கொள்ளுகிறார்கள். இத்தீய குணத்தை விடுத்து பொறுமையை மேற்கொள்ளும் வண்ணம ஒத்துழையாதார் யாவருக்கும் ஈசன் அருளை வேண்டுகிறோம்.

* * *

வருகிற வருஷத்திற்கு அரசாங்க வரவு சிலவு திட்டம் தயாரித்து சட்டஸபைகளுக்கு முன் கவர்ன்மெண்டார் வைத்துள்ளார். வரவுக்கு செலவு அதிகமாகவே திட்டப்பட்டுள்ளது. சென்ற வருஷத்திய வரவு செலவைப்பற்றிய குறிப்புகளும் தெரிவிக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தார் சார்பில் வரவு செலவு விஷயங்களை எடுத்துச் சொல்லும் அதிகாரியின் வார்த்தைகளைக் கேட்க நம் சட்ட ஸபைப் பிரதிநிதிகளுக்கு அதிக சந்தோஷமே. 'என் நிலைமை வெகு கஷ்டமான நிலைமை காலமோ விபரீதமாயிருக்கிறது. செலவைக்குறைப்பதற்கும் வழி தோன்றவில்லை. வரவை அதிகப்படுத்துவதற்கும் வழியில்லை. ஆயினும் செலவு செய்து தீரவேண்டும். என்னிஷ்டத்திற்கு மாறாகவே வரியும் விதிக்க வேண்டியிருக்கிறது. நீங்கள் தான் என் கஷ்டநிலையை நிவர்த்திக்க வேண்டும்!' இவ்வாறு வரவு செலவு மெம்பர் சட்டஸபை அங்கத்தினர்கள் முன் சொல்லும் போது நம் சட்டஸபையாருக்கு ஏற்படும் சந்தோஷத்திற்கு அளவேயில்லை. சந்தோஷத்தில் தேச ஸேவை மறந்து போம்.

---

## வட இந்தியாவிலுள்ள சில புண்ய க்ஷேத்திரங்கள்.

### III. புத்தகயா.

K. R. R. சாஸ்திரி M. A. F. R. Econs. S.

சென்ற டிசம்பர் மீ கடைசி வாரத்தில் பல்வேறு கான்பரன்ஸுகள் பல்குனி நதிக்கரையிலிருக்கும் கயாவில் நடந்தன. "இந்தியன் ஸோஷியல் ரிபார்மர்" பத்திரிகாதிபரான ஸ்ரீமான் கே. நடராஜன் எழுதிய பிரகாரம், "கான்பரன்ஸுகளுக்கெல்லாம் முக்கியமானதாயிருந்தும், சற்றேனும் கருதப்படாத விஷயம் யாதெனின், இந்த கயாவில் 2500 வருஷங்களுக்கு முன் ஸித்தார்த்த புத்தர், அஹிம்ஸா மதக் கொள்கையைப் பரவச் செய்தனர்" என்ற அரிய கொள்கையே.

#### புத்தகயாவுக்குப் போகும் வழி.

கயா ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து, சுமார் 7 மைல் தூரத்தில் புத்தகயா விருக்கிறது. இப்பேர்ப்பட்ட முக்கிய ஸ்தலத்தில் ட்ராம் வண்டியொன்றும் கிடையாது. போகும் வழியில் ஹிந்துக்களெல்லாம் கயாசிராத்தம் செய்யும் அக்ஷயவடமும், விஷ்ணுபாதமு மிருக்கின்றன. கயாவிலுள்ள பாதைகளிலுள்ள புழுதிக் கோளவில்லை. இந்த புத்தகயா கோயிலையும், அதைச் சேர்ந்த 18 கிராமங்களையும் மேற்பார்வையிடும் ஹிந்து மஹந்தின் இருப்பிடத்திற்குச் செல்லுகிறோம்.

#### புத்தகயா கோவிலின் நிலைமை.

புத்தகயா விஹாரமோ (கோயில்) ஆகாயத்தை உலாவிச் செல்லும் ஒரு கோபுரத்தை யுடையது, அதின் அமைப்பு. புராதன சிற்ப வேலையை யெடுத்துக் காட்டுவதுடன், உயரம் அகலம் இவைகளில் வெகு துல்யத்தையும், சாமர்த்யத்தையும் நிரூபிக்கிறது. கோயில், சுற்றியிருக்கும் பாதைக்குப் பள்ளத்திலிருக்கிறது. ஸித்தார்த்த முனியும், விஷ்ணுவின அவதாரம் என்று சில சார்பார்களால் கொண்டாடப்படும் பௌத்த பகவானும், இவ்வுலகினுக்கே அஹிம்ஸா விரதத்தை முதல் முதல் புகட்டியவர். நாம் கோயிலுக்குள் நுழையும் பொழுதே, த்யான நிலையில் வீற்றிருக்கும் புத்த பகவானது பெரிய உருவம் தென்படுகிறது. டாக்டர் பரீஸ் ஹேறாம் என்றவர் சொல்லிய பிரகாரம், "நாம் தேடிப்போய்ச் சேரவேண்டிய விடம் வந்துவிட்டோம். இவ்விஹாரத்தைச் சுற்றி எங்கு பார்த்தாலும், சாந்தமும், ஸமரஸ பாவமுமே எதிர்பட்டு நிற்கின்றன." இது, அன்பின் அவதாரமான புத்தபகவானது அனுக்கிரகமே. "சாந்தம் அங்கிருக்கிறது, உன்னைச் சுற்றி எங்குமிருக்கிறது. நீ அதை அறிகிறாய், உனக்கு இருப்பதும் தெரியும்."

#### போதி விருக்ஷமும், ப்ராகாரமும்.

ப்ராகாரத்தில் உலகிற்கே சாந்தத்தை இன்றைக்கும் போதிப்பதற்கு வல்லமையுள்ள போதி விருக்ஷ மிருக்கிறது. பௌத்த பிக்ஷுவும், மஹா கவி டாகூரது சாந்திநிகேதனில் பாலிபாஷை போதிப்பவருமான தம்மபாலதேரா என்ற ஆன்றோருடன் நான் பேசியதன் பலனாக, இது, ஆதி போதிவிருக்ஷத்து 4 வது தலைமுறை என்ற வதந்தியை யறிந்தேன். இதினடியிற்றான் ஸித்தார்த்தர் ஞானமடைந்தார். கலிங்கபோதி ஜாதகக் கிரந்தத்தில் இதைப்பற்றி புத்தபகவான் உபதேசிக்கிறார்:—"ஆனந்தா! இவ்வுலகில் இந்த போதி விருக்ஷம் நிற்குமிடத்தைப் போல், அவ்வளவு பரிசுத்தமான இடம் கிடையாது."

#### புத்தகயாவின் சீர்கேடு.

உலகத்தில் எல்லா மதத்தையும் விட அதிக சார்பார்களை யுடையது புத்தமதமாகும். ஆனல், ஏன் புத்தகயாவில் அதிக புத்த மதத்தினரைக் காணோம்? ஹிந்து மஹந்தின் ஆதீனத்தில் வந்த பிறகு கோயில் விக்கிரகங்களுக்கு விளைந்திருக்கும் சீர்கேட்டை நான் பார்த்ததிலிருந்து இறுதியாக வெழுதுகிறேன். இந்த விஹாரத்தின் சரித்திரத்தை ஆராய்ச்சி செய்தால், இச்சீர்கேட்டின் காரணம் வெளியாகும்.

#### புத்தகயா கோயிலின் சரித்திரம்.

பலநூற்றாண்டுகளாக இக்கோயில் கவனிக்கப்படாமலிருந்து வந்தது. கிரி வம்சத்திற் பிறந்த ஒரு பக்கிரி அங்கே போய் ஜனங்கள் வசிப்பதற்குவேண்டிய வசதிகளை செய்வித்தார். 1833-ல், பர்மாவிலிருந்து ஒரு தூது இங்கே வந்து அப்பொழுதிருந்த மஹந்தினிடம் பேசிய பொழுது, "இந்த போதிவிருக்ஷத்திற்கு பர்மாவிலுள்ளோர்தான் பாலகர்களாக வேண்டும்" என்று சொன்னர். 1861 லும் 1871 லும் கன்னிங்ஹாம் என்றவர் சரித்திர ஆராய்ச்சி செய்வதற்காக புத்தகயாவைப் பார்வையிட்டார். 1876 ல் மற்றொரு பர்மா தூது கயாவுக்கு வந்தது. 1877 ஜனவரி மீ கோயிலை புனருத்தாரணம் செய்வதில் பர்மா வேலைக்காரர்கள் முயற்சி எடுத்துக்கொண்

டார்கள். வங்காள கவர்ன்மெண்டாரும் அந்த வருஷத்தில், பர்மா வேலைக்காரர்கள் எப்படி வேலை செய்கிறார்கள் என்பதைப் பற்றி ரிபோர்ட்டு செய்யும்படி டாக்டர் ராஜேந்திரலால் மித்ராவை அனுப்பினார்கள். ரிபோர்டு பர்மாக்காரர்களுக்கு ஸாதகமாயில்லை. மற்றும் 1884-௵ மார்ச்சுமீ கன்னிங்ஹாம் ஆதரவில் வேலையும் முடிவடைந்தது. பர்மாவுடன் யுத்தத்தின் காரணமாக அங்கிருந்த பௌத்தபிக்ஷுக்கள் ஊரை விட்டுப்போகவேண்டியதாயிற்று 1885ல் ஸர் எட்வின் ஆர்னால்டு போன பொழுதும், 1890ல் ஜார்ஜ் (இப்பொழுது ஸர்) கிரியர்ஸன் பார்வையிட்ட பொழுதும், கோயில் சரியாய் ஆதரிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. தற்காலத்தில, கவர்மெண்டார் ஏற்பாட்டின் பேரில், ஒரு ஹிந்து மஹந்த் மேற்பார்வையின் கீழ் கோயிலிருக்கிறது.

### புத்தகயாவில் ஆடுகள் பலியாம்.

பிக்ஷு தம்மபாலதேராவின் சாக்ஷியிலிருந்தும், நான் நேரில் பார்வையிட்டதிலிருந்தும், புத்த விஹாரம் நாளடைவில் ஹிந்து கோயிலாக்கப்படுமோ வென்ற சங்கைக்குத்தக்க ஆதாரங்களிருக்கின்றன. மத்தியிலிருக்கும் பெரிய புத்த விக்ரஹத்திற்கு மூன்று சூலங்கள் நெற்றியில் போடப்பட்டிருக்கின்றன. இடது பக்கத்திலுள்ள ஒரு புத்த விக்ரஹத்திற்கு புடவையை யுடுத்தி காளிதேவியாக்கப்பட்டிருக்கின்றது போலும். மேடையில் வீற்றிருக்கும புத்த விக்ரஹம் இப்பொழுது தேவி ஸ்வரூபமடைந்திருக்கிறது. மூலஸ்தானத்திற்கு வலதுபுரத்தில், ஒரு புத்தர் விக்ரஹம் கையொடிந்ததாயிருக்கிறது. மீசை முகத்தில் கீரப்பட்டிருக்கிறது. சில வருஷத்திற்கு முன்தான் செய்த வேலை என்பதற்கு யாதொரு தடையுமில்லை. மேடையில் ஐந்து அவஸரங்களில் காண்பிக்கப்பட்டிருக்கும் சிறிய புத்த விக்ரஹத்திலொன்று உடைந்திருக்கிறது. போதிவிருக்ஷத்திற்கு முன் ஒரு அக்னி குண்டம் புதிதாய் நிர்மாணிக்கப் பட்டிருக்கிறது. "விஹாரப்ரதக்ஷிணத்திற்கு வலதுபக்கத்தில் ஒரு வெள்ளாடு வெட்டி யாகம் செய்யப்பட்டதை நான் ½ வருருஷத்திற்கு முன் நேரில் பார்த்தேன்" என்று தம்மபாலதேரா என்னிடம் சொன்னார். பூஜை செய்பவரோ ஒரு ஹிந்து.

### புத்தகயா பௌத்த மதத்தினரதே.

தற்காலம் பௌத்த மதத்தினர் வேண்டிக்கொள்வது யாதெனின், புத்தகயா திரும்பக் கட்டப்படவேண்டும்; அன்னிய தேச வாஸத்திலிருந்து பௌத்த மதத்தினர் திருப்ப அழைக்கப்பட வேண்டும்; மேலும் அவர்களது விஹாரங்களில் பூஜை முதலியன பௌத்த மதத்தினரால் நடத்தப்பட வேண்டும், என்பவையே. இவை எல்லாம் நியாயமே. புத்த மதத்தைப் பற்றி நன்கறிய முடியாத நிலைமையில், புத்த மதத்திலும் அவர்கள் தொழும் ஏற்பாடுகளிலும் யாதொரு நம்பிக்கையுமில்லாத ஹிந்துக்கள், எவ்வாறு புத்தர் கோயிலை நியாயமாய் மேற்பார்வையிட முடியும்? ஒவ்வொரு உண்மையான ஹிந்துவும் "இந்த ஸஹிக்கமுடியாத" அநீதியையும், அக்ரமத்தையும் ஒழிக்க முன்வர வேண்டும். நம் புண்ய பூமியில் பிறந்து, உலகெல்லாம் அஹிம்சா தர்மத்தை நிலைநிற்கச் செய்த புத்த பகவானுடைய சிஷ்யர்களுக்கு, நாம் இக்கைம்மாறுகூட செய்யாவிடில் என்னே ஹிந்துக்கள்?

---

## நாவல் உலகு.

[C. S. பம்பாபதி சாஸ்திரி, B. A. B. L.,]

**நா**கரிக மென்று நாம் ஓயாப் பெருமை கொண்டு உரையாடி வரும் நாகரிகம் எப்படிப்பட்டதென்று சிறிது சிந்திப்போம். உண்மையில் உயர்விலும், நாகரிகத்திலும் தற்சமயம் தாங்களே முதன்மையானவர்களெனப் பறையறைந்துவரும் ஐரோப்பியர் இந்தியா வந்து, நம்மிடையே புகவிட்ட நாகரிகத்தையே நாம், நமதாகக் கொண்டு செருக்கடைந்துளோம். இது நம்முடைய அறிவீனத்தால் நிகழ்ந்ததேயன்றி வேறல்ல.

உலகத்தில், எவரும் உண்டுஉடுத்தி மனித சமூகத்தை ஓர் உயர்வான பிறப்பென்று ஸ்தாபிப்பதற்கு எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னரேயே, நம்முடைய இந்தியா தேசம் கல்வியிலும் நாகரிகத்திலும் உயர்வடைந்திருந்தது. ஏன்— இந்தியாவே பிற தேசத்தினர்க்கு மனிதப் பிறப்பின் உயர்வை உணர்த்தியது. ஆனால் இன்று தன் பண்டைப் பெருமையை விதியால் ஏற்பட்ட நாகரிகக் கல்வியால் அறவே யிழந்து அந்நிய நாட்டினரின் அவமதிப்புக்கு ஆளாகி நிற்கிறது. இந் நவ நாகரிகத்தால் தன் மதி கலங்கி பெரிதும் வெறுக்கத்தக்க செய்கைகளை பலபடச் செய்து வருகின்றது. தன் செய்கைகளைக் கண்டிக்கும் ஒருவனைக் கடித்து விழுங்கிவிடக் கதறி நிற்கின்றது. பரிதாபம் !

இந்தியநாடே! உன் நிலைமையைச் சிறிதேனும் சிந்தித்துப்பாராயோ ? உன் கல்வியை யிழந்தாய். உன் வியாபாரத்தையு மிழந்தாய். அடிமைத்தனம் கொண்டாய்.

நீ அணிந்திருக்கும் 'அடிமை' யெனும் ஆடையை இன்றே நீக்கி, ஆண்மைத்தன மெனும் ஆடையைத் தரித்து மகிழ்வாய் ! ஒரு சிலர் உன்னத மாடமாளிகைகளில் உல்லாசயாக உலவி வருகின்றனரென வீண் பெருமை வேண்டாம். உன் மக்களில் பெரும் பான்மையோர் ஒரு வேளைக் கஞ்சியும் குடிப்பதற்கில்லாது நாகரிக பலிபீடத் தின்கண் போடும் கூச்சலும் உன் செவிகளுட் புகவில்லையோ ? இதுவே உன்மக்களின் மாண்பு! இதுவே அவர்கள் அனுபவிக்கும் இன்பம்; சுகம்; சுதந்திரம் !

இதை யொழிக்க ஒரே யொருவழி யுளது. அது நம்மறிவைப் பெருக்க வேண்டுவதே. அறிவைப் பெருக்க நம் புராதன நாட்டுக் கல்வி வேண்டும். இத்தகைய கல்வியைப் போதிக்க பல கல்லூரிகள் வேண்டும். நம் மக்களின் எதிர்கால வாழ்வுக்கு பலனளிக்கும் பல பண்டைச் சாத்திரங்களையும், சரித்திரங்களையும் போதித்தல் அத்தியாவசியம். நமது நாட்டுக் கைத்தொழிலையும் கற்பித்தல் சாலச் சிறந்தது. நம்முடைய நிலைமையை உள்ளபடி எடுத்துரைத்து சீர்திருத்த பல பத்திரிகைகளும் இருக்க வேண்டும். நம் சகோதரிகளுக்கும் அவர்களுக்கு அவசியமான கல்வி யளிக்க வேண்டும். அவர்களைக் கேவலம் மிருகங்களைப் போல் நடத்துவதை ஒழித்து.

"மருவிய காதன் மனையாளுந் தானு
மிருவராய்ப் பூண்டுய்ப்பினல்லா-லொருவரா
லில் வாழ்க்கை யென்னு மியல்புடைய பொற்கடஞ்
செல்லாது தெற்றிற்று நின்று."

என்பதை அறிவுறுத்தி பாராட்டல் வேண்டும்.

இது விஷயமாய் நம் சகோதரிகளை வேண்டிக் கொள்வதொன்று உண்டு. சகோதரிகளே! நீங்களும் நாம் அடைந்துள்ள கேவலமான நிலைமையை ஆராய்தல் வேண்டும். நம் மூதாதையர்களைக் கேவலம் மூடாத்மாக்களெனக் கருதிவிட வேண்டாம். நாம் ஆங்கிலம் கற்றதாலாவது வேறெக் காரணத்தினாலாவது உயர்ந்த நாகரிகம படைத்தவர்களாக மாட்டோம். சிற்சிலர் நடவடிக்கைகளைக் கொண்டு அவர்களெல்லோரும் கன்னெஞ்சம் படைத்த பாபிகளென அவமதிக்காதீர்கள். உங்களுடைய இயற்கை யழகை யழித்து உங்களைப் பாழாக்கிக் கொள்ள வேண்டாம். இது போதனையல்ல. இது உபதேசமல்ல. இதுவே நம் எல்லோருடைய இவ்வாழ்வின் தத்துவம். உங்களிற் சிலர் அறிந்திருப்பர், சிலர் அறியாது அஞ்ஞானத்தால் மூடப்பட்டு, மூழ்கிக்கிடப்பர். உங்களுடைய தெய்வீகமான இன்ப இல்வாழ்விற்கும் சிறந்த வாழ்வு ஒன்றுளதோ? பெற்றோர்; கணவர், மக்கள் முதலியவருடன் இணங்கியிருந்து அறநெறி கைப்பிடித்து வாழும் வாழ்வே இன்பமும், நாகரிகமும் கலந்த வாழ்வு. இவ்வாழ்வே ஸ்திரீ சுதந்திர வாழ்வு, மற்ற வாழ்வெல்லாம் பேய்வாழ்வே!

"வழிபாடுடையாளாய் வாழ்க்கை நடா அய்
முனியாது சொல்லிற்றுச் செய்யா தெதிருரையா
தேத்திப், பணியுமே யில்லாளை யாண்மகனும்
போற்றிப் புரியும் புகழ்ந்து."

---

## புயற் காற்று.

[V. நாராயணையர் M. A, M. L.,]

(பிரஹ்ம ஸமாஜத்தைச் சேர்ந்த அந்நதபாபுவின் குமாரியும், நண்பன் யோகேந்திரனின் சகோதரியுமான ஹேமநளினியை இராமேசன் காதலித்ததும், அவனுடைய தகப்பனார் அவனை ஊருக்குக் கூட்டிச் சென்று அங்கே அவனுக்கு மணம் செய்வித்ததும், மணம் கழிந்து ஊருக்கு மணப்பெண்ணுடன் திரும்பி வரும்போது புயற்காற்றால் ஆற்றில் ஓடங்கள் கவிழ்ந்ததும், அப்போது வேறு ஓடத்தினின்றும் தப்பிப்பிழைத்த கமலா என்ற சிறு பெண்ணை தன் மனைவி யெனவும் அவளும் கல்யாண காலத்தில் தன் புருஷன் முகத்தை நன்றாய் பார்த்திராததால் இராமேசனை தன் கணவன் எனவும் கொண்டதும்; பிறகு இராமேசன் கமலாவை டோபாபுகூர் தாணீ சரணரின் தமையன் மகள் என்றும், வேறு ஒருவர் மனைவி என்றும் அறிந்ததும், ஹேமநளினியை மறுபடி நாடி கல்யாணத்திற்கு உடன்பட்டதும்; யோகேந்திரன் அக்ஷயனுடன் இராமேசன் வீடு சென்று அங்கு இருந்த கமலாவுடன் இராமேசன் பேசிக்கொண்டிருந்ததை நேரில் பார்த்து இராமேசனோடு ஆத்திரத்துடன் வாதாடி கல்யாண ஏற்பாட்டைக் குலைத்ததும்; இராமேசன் கமலாவுடன் கப்பல் மார்க்கமாய் வேறு இடம் நோக்கிச் சென்றதும்; பிரயாணகாலத்தில் ஒரு நாள் இராமேசன் கமலாவுக்கு கதை சொல்லுவது போல் தன்னுடைய சரித்திரத்தைச் சொல்லி கமலாவை கலங்கச் செய்ததும், சமையல் வேலைக்கு உதவி புரியும்படி அமர்த்தப்பட்ட உமேசனுடைய பரிதாப நிலையைக் கேட்டு கமலா அவன்பால் கருணை கொண்டதும், சென்ற சஞ்சிகையிலுள்ள கதை)

இராமேசன் புஸ்தகத்தைவிட்டு எழுந்து கமலாவின் அறையுள் எட்டிப்பார்த்து, "என்ன சக்கிரவர்த்தி மாமா, கமலாவும் நீரும் என்னகதை—"

இராமேசனைக் காணக் கூசுவாளாய் கமலா "வேண்டாம் வேண்டாம்; நான் தான் சற்று பேசலாம் வாரும் என்று மாமாவைக் கூப்பிட்டேன்" என்றாள் அவள். எதை "வேண்டாம், வேண்டாம்" என்றாள் என்பது அவளுக்கே தெரியாது; ஆனால் அதன் தாத்பரியம் என்னவெனில் "என் பயத்தைப் போக்குவதற்கு யாராவது வேண்டுமென்று நினைக்கிறேன் என்று நினைக்கிறீர்களோ? ஒருவரும் வேண்டாம் எனக்கு. நீங்கள் இல்லையே என்றும் நீங்கள் வேண்டுமே என்றும் வருந்துகிறேன் என்று நினையாதீர்கள்; வேண்டியதில்லை" என்பதே.

"நாழிகை யாகிறது, மாமா; நீங்கள் படுத்துக் கொள்ளப் போங்கள்; போகும் பொழுது உமேசன் காற்றைக்கண்டு பயப்படாமல் இருக்கிறானா என்று பார்த்துவிட்டுப் போங்கள்" என்றாள் கமலா.

"எனக்கென்ன, பயம் அம்மா" என்ற உமேசன் குரல் கேட்டது; உமேசன் இருட்டில் தன் யஜமானியின் அறைக் கதவண்டையிலேயே குளிரில் நடுங்கிப் படுத்திருந்தான்.

அவன் தன் மீது காட்டிய அன்பிற்கு உருகி கமலா எழுந்து அவனருகிற் சென்று "உமேசா! உன் உடம்பெல்லாம் மழையில் நனைந்திருக்கிறதே. நீ போய் மாமாவின் அறையிற் போய்ப் படுத்துக்கொள்" என்றாள்.

அவ்வண்ணமே உமேசன் சக்கிரவர்த்தி மாமாவுடன் போனபின்பு:

"உனக்குத் தூக்கம் வரும் வரையிலும் உன்னுடன் பேசிக்கொண்டிருக்கிறேன்" என்றான் இராமேசன்.

"வேண்டாம்; எனக்குத் தூக்கம் வந்துவிட்டது" என்றாள் கமலா.

கமலாவின் மனமெல்லாம் இராமேசனுக்கு அப்போது நன்கு விளங்கிற்று; ஆயினும் அவன் ஒன்றும் சொல்லவில்லை; ஒரு பார்வையிலேயே அவள் மனம் வருந்தி கோபித்திருக்கிறாள் என்று உணர்ந்துகொண்டு தன்னறையுட் போய் படுத்துக்கொண்டான்.

கமலாவுக்குற்ற மனக்குழப்பத்தில் அவளுக்குத் தூக்கம் வரவில்லை; படுத்துப் பார்த்தாள்; வெளியே புயற்காற்று உக்கிரமடைந்தது; ஆற்றில் அலைகள் உயர்ந்து கிளம்பின; கப்பல் வேலைக்காரர் எழுந்து எச்சரிக்கையுடன் அதிகாரிகளின் உத்திரவுப்படி நங்கூரத்தால் மட்டும் நிலையில் நிறுத்த முடியாத அந்தக் கப்பலுக்கு ஆதாரமாய் இயந்திரங்களை ஓட்டுவித்தனர்.

மேல் போர்த்திருந்த துணிகளை வீசியெறிந்து கமலா படுக்கையினின்றும் எழுந்து வெளியே கப்பல் மேல்புறத்திற்குச் சென்றாள். மழை சற்று ஓய்ந்திருந்தது; ஆயினும் அலறிச்சுழலும் காற்றின் பெருங் கூச்சலும் அமரவில்லை.

இரவில் வானமெல்லாம் மேகங்கள் பரவியிருந்தன; காலனின் படையாட்கள் போல் வானத்தில் விரைந்து செல்லும் மேகங்களின் இடையே முழுமதியின் மங்கிய ஒளி பரந்திருந்தது; கரைப்புறங்

கள் இரண்டும் கண்ணிற்குப் புலப்படவில்லை; ஆற்றின் நீர் பரப்புக்கூட தென்படாது கலங்கியிருக்கவே, ஆகாயமும், பூமியும், அருகாமையிலுள்ள பொருட்களும் அதிதூரத்தில் விளங்காமல் மங்கி இருப்பனவும் ஆகிய எல்லாம் மருண்டு திரண்டு கலங்கித தோன்றியதால் காலன் எதிர் வரும் காரெருது கொம்பை நீட்டிக்கொண்டு கோபித்து வருவது போன்று இருந்தது.

இவ்விதம் இரவே கலங்கி வெருண்டதுபோல் தோன்றியதையும் வானம் கலங்கி விழுவது போல் தோன்றியதையும் கண்ட கமலாவின் மனதில் எழுந்த எண்ணங்கள் அவளுக்கே இன்னன என்று விளங்கவில்லை; அது பயமோ? ஒருவிதக் களிப்போ?

விரைந்தெழும் இந்த பஞ்சபூதங்களின் செயல், கட்டுக்கடங்கா தெழுந்த சக்தி அவளது மனதிலும் ஒருவித உணர்ச்சியை எழுப்பிற்று; வெளித்தோற்றம் இவ்விதம் பொங்கி மீறி எழுந்தது, அவளுக்கு ஒருவித ஆச்சரியத்தை விளைத்தது; யார் சட்டுக்கு அடங்காமல் இவை எழுகின்றனவோ? வெளியே கர்ச்சித்தெழும் புயலிலும் இதற்கு சரியான பதில் அவளுக்குத் தோன்றவில்லை. தன் மனதிலுள்ள சுழற்காற்றைப் போலவே, வெளியில் சுழலும் புயற்காற்றும் அவ்யக்தமாகவே பதிலளித்ததே! இந்தப் புயற்காற்றும் உருவற்று நன்கு விளங்காத வோர் மாய வலையை கிழித்தெறிய முயன்று மனம் வருந்திக் கூவும் குரலன்றோ இந்தக் காற்றொலியும்.

“வேண்டாம், வேண்டாம்” என்று மருதலிப்பது போன்று, அலகிலா ஆகாயத்தை ஊடுருவி நல்லிருளில் அலையும் இப்பெருங் காற்றும் சப்திக்கின்றதே! அது எதை “வேண்டாம்” என்கின்றதோ! எதை என்று நிச்சயமாய்ச் சொல்ல முடியாது; ஆயினும் அதுவும் ஒரே தீர்மானமாய் ஒரே முடிவாய்.

“வேண்டாம், வேண்டாம்; வேண்டவே வேண்டாம்” என்று அலறிக் கூவுகின்றது.

மறுநாட்காலை பெருங்காற்று சற்று அமர்ந்தது; ஆயினும் முற்றும் அமரவில்லை. நங்கூரத்தை வாங்கி கப்பலை மேல் நடத்தலாமா வென்று கப்பலதிகாரி ஆகாய மண்டலத்தை உற்று நோக்கித் தயங்கி நின்றான்.

சக்கிரவர்த்தி கமலாவினது அறைக்கு அடுத்த அறையிலிருந்த இராமேசபாபுவைக் காண அதிகாலையிலேயே வந்தார். இராமேசன் அப்போது எழுந்தாக வில்லை. சக்கிரவர்த்தியைக் கண்டதும் எழுந்து உட்கார்ந்தான். இரவு முழுவதும் அந்த அறையிலே தான் இருந்தான் என்பதை கண்டுணர்ந்த சக்கிரவர்த்தி சென்ற நாள் நடந்த விருத்தாந்தத்தையும் இதையும் மனதில் சேர்த்துக் கொண்டு:

“நேற்று இங்கேயே படுத்திருந்தீர் போலும்” என்று வினவினர்.

இராமேசனை பதில் மழுப்பப் பார்த்தான். “இன்னும் இந்தக்காற்று ஓயவில்லையே! நேற்று நன்றாப் தூங்கினீரா, மாமா?” என்று பேச்சை மாற்ற முயன்றான்.

சக்கிரவர்த்தி: “இராமேசபாபு! என்னை கிழட்டுப் பைத்தியம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர். ஆம், நான் பைத்தியம் மாதிரி தான் பேசுகிறேன். ஆனாலும் என்னுடைய ஆயுளில் எத்தனையோ புதிர்களை அவிழ்த்திருக்கிறேன். அநுபவமுண்டு. ஆனால் நீர் பெரும்புதிராக இருக்கிறீர். உம்மையறிய முடியவில்லை.” தன்னையறியாமலே இராமேசன் வெட்கித் தலைகுனிந்தான். ஆயினும், உடனே தலை நிமிர்ந்து புன்னகையுடன்:

‘அவிழ்க்க முடியாத புதிராயிருப்பது ஒரு குற்றமா, மாமா? உமக்குப் புரியவில்லை என்றால்! தெலுங்கு பாஷையைப் பாரும் நமக்கு அது எவ்வளவோ கடினமாய் புதிர்போல் இருக்கிறது. ஆனால் தெலுங்கக் குழந்தை ஒரு நொடியில் அதை அறிந்து கொள்கிறது. நமக்குத் தெரியாததை உடனே நல்லதல்ல என்று கண்டனம் செய்வது சரியல்லவே? புதிதாய் நூதனமான அடையாளங்களைக் கண்டால், இவைகளையும் அறிய முடியுமோ என்று ஏங்கி அவைகளை அறிய முயலாமல் பின் வாங்கினால் யார் பிசகு அது?”

“மன்னிக்க வேண்டும், இராமேசபாபு, என்னிடம் அந்தரங்கமாய்ப் பழகாதவர்களைப் பற்றி நான் அறிய முயன்றது பிசகே; ஆனாலும் சிலரைக் கண்டவுடன் மனது அவர்கள் பால் செல்கிறது, என்ன செய்யலாம்; இதோ இந்த தாடித் துலுக்கனைப் பார்! அவன் கப்பல் வேலைக்காரனாயினும் உன் மனைவியிடம் எவ்வளவு பக்ஷமாய் இருக்கிறான், தெரியுமா? அவனை வேண்டுமானால் கேட்டுப் பார்; ஒப்புக் கொள்ளா விட்டால் முஸல்மான் அல்ல; அப்படி இருக்கும் போது, திடீரென தெலுங்கு பாஷையைப் போல ஒரு பெரும் புதிர் உண்டாயிற்று என்றால் எப்படியிருக்கும்; நீயே யோசித்துப் பார் அப்போது என்மீது மனஸ்தாபம் கொள்ள மாட்டாய்.”

“நான் யோசியாமலிருக்க வில்லை, அதனால் தான் கோபிக்காதிருக்கிறேன். அதிருக்கட்டும்; நான் கோபித்தாக் கொண்டாலும் கொள்ளா விட்டாலும், நீர் மனஸ்தாபப் பட்டாலும் படாவிட்டாலும் தெலுங்கு தெலுங்காகவே இருக்கிறது. மாறுவதில்லை; அதற்கென்ன செய்வது” என்று இராமேசன் பெருமூச் செறிந்தான்.

காஸிபூரிலேயே போய் குடியிருப்பது உசிதமா என்ற சந்தேகம் உண்டாயிற்று இராமேசனுக்கு; புதிதாய் ஒரு ஊரில் குடித்தனம் தொடங்குவது என்றால் எவ்வளவு கடினம், இந்தக் கிழவருடன்பழகியிருக்கிறோம், ஆகையால் அவரூரிலேயே போயிருப்பது நலம் என்று நினைத்திருந்தான் இராமேசன்; ஆனால் இப்பொழுதோ தன்னை அறிந்தவர் ஊரில் இருப்பது அவ்வளவு சிலாக்கியமல்ல என்று தோன்றிற்று; தனக்கும் கமலாவுக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றி ஊரார் பேச ஆரம்பித்து விட்டால் கமலாவின் மனது எவ்வளவு கஷ்டப்படும். யாரென்று கூட கேட்பதற்கில்லாத ஊரிலே யாருமறியாதபடி அமர்ந்து இருப்பதன்றோ மேல்?

ஆகவே, காஸிபூரை கப்பல் அடைவதற்கு முந்தின நாளே இராமேசன் சக்கிரவர்த்தியைப் பார்த்து “மாமா, காஸிப்பூர் என் உத்தியோகத்திற்கு ஒவ்வாதென்று தோன்றுகிறது; காசிக்குப் போய் குடியிருக்கலாமென்று நினைக்கிறேன்.”

இவ்விதம் இராமேசன் தீர்மானமாகச் சொன்னது சக்கிரவர்த்திக்கு அதிசயமாயிருந்தது. “இப்படி அடிக்கடி பேச்சை மாற்றுவது, திடபுத்தி என்று நினைக்கிறாய்! என்ன சஞ்சலம்! அதிருக்கட்டும், இப்பொழுது காசிக்குப் போவதென்று

நிச்சயித்திருக்கிறாய் போலும்!" "ஆம்" என்றான் இராமேசன் கண்டிப்பாய்.

சக்கிரவர்த்தி பேசாமல் போய்விட்டார். அவர் மூட்டைகளைக் கட்டுவதைக் கண்டு கமலா, "என்ன மாமா, ஒரு மாதிரியாயிருக்கிறீர்கள், என்மேல் கோபமா?" என்று மெதுவாய் கேட்கவே:

"கோபப்படாமல் என்ன செய்வது? காலை முதல் சாயங்காலம் வரையும் நாம் இருவரும் சண்டை போடும்போது? என்னை ஜெயிக்கவிடுவதுமில்லை." கமலா "இன்று காலைமுதல் என் ஓதுங்குகிறீர்."

சக்கிரவர்த்தி: "நானா? நீயன்றோ ஓடிப்போகப் பார்க்கிறாய்?" கமலாவுக்கு அவர் பேசியது விளங்கவில்லை; திகைத்து நின்றாள்.

"இராமேசபாபு உன்னிடம் சொல்லவில்லையா? நீங்கள் காசிக்குப் போவதென்று நிச்சயமாய் விட்டது என்று." கமலா அவர் சொன்னதை ஒப்புக்கொள்ளவும் இல்லை, மறுதளிக்கவுமில்லை. சற்று நேரம் சும்மா இருந்தபின், கமலா: உமக்குத் தெரியாது, மாமா மூட்டைகட்ட; இங்கே கொடுங்கள்; நான் கட்டித் தருகிறேன்" என்றாள்.

காஸிப்பூருக்குப் போவதில்லை என்று கேட்டும் கமலா அசட்டையாய் கவனியாமலிருந்தது கிழவருக்கு வருத்தமாயிருந்தது. "வாஸ்தவந்தான், இந்த வயதில் புதியசிநேகங்கள் கொண்டாடுவதில் என்ன பயன்!" என்று தனக்குள்ளே முணுமுணுத்துக்கொண்டார்.

இராமேசன் வேறு ஊருக்குப் போவதென்ற தீர்மானத்தைக் கமலாவிடம் நேரில் சொல்லுவதற்கு வந்தான். "உன்னைத்தான் தேடிக்கொண்டு வந்தேன்" என்றான். கமலா சக்கிரவர்த்தியின் துணிமணிகளை மடித்து மூட்டைகட்டிக்கொண்டிருந்தாள்.

"கமலா, இப்போது காஸிப்பூருக்கு போவதாயில்லை; காசிக்குப் போய் வேலை செய்யத் தொடங்குவதாய் உத்தேசித்திருக்கிறேன்; சம்மதந்தானே?" "இல்லை, நான் காஸிப்பூருக்குப் போகிறேன் மூட்டையெல்லாம் கட்டிவைத்திருக்கிறேன்" என்று கமலா, சக்கிரவர்த்தியின் மூட்டையினின்றும் நிமிர்ந்து பாராமல்பதிலளிக்கவே, கமலா ஒரே தீர்மானமாய் இப்படிச் சொல்வதைக் கேட்ட; இராமேசன் "ஆனால், நீ தனியே போகிறாயா?" "இல்லை, இல்லை; மாமாவும்கூட வருகிறார்" என்று கிழவரைப் பிரியமாய் நோக்கவே, சக்கிரவர்த்தி: "அம்மா, நீ இப்படி என்மேல் பக்ஷபாதமாயிருந்தால் இராமேசபாபு பொறாமைப்படுவார். இது சரியல்ல" என்று சொன்னார்.

ஆயினும், கமலா "நான் காஸிப்பூருக்குத்தான் போகிறேன்" என்று மறுபடியும் சொல்லும்போது தன்னிஷ்டப்படி நடக்கசுயாதிகாரம் பெற்றவள் என்று தோன்றும்படி இருந்தது அவளது அழுத்தமான பேச்சு.

"சரி, மாமா காஸிப்பூருக்கே போவோம்" என்றான் இராமேசன்.

சாயங்காலம், மழை பெய்தபின் வானம் நிர்மலமாயிற்று; இராமேசன் சந்திரிகையில் வெகுநேரம் யோஜனையில் ஆழ்ந்து உட்கார்ந்திருந்தான். "இப்படி எத்தனை நாள் இழுத்துச் செல்ல முடியும்! கமலாவும் அடங்காமல் நடந்து கொண்டால் ஒன்றும் செய்யமுடியாதே! அவளுடன்கூட இருந்துகொண்டே எப்படி விலகிப்பிரிந்து இருப்பது! இப்படி அதிகநாள் இருக்கமுடியாது என்னவாயினும் கமலா என் மனைவியல்லவா? ஆரம்பத்தில் அவளை மனைவியென்றே கருதினேன்; கல்யாண மந்திரங்களை ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொள்ளாவிட்டால் என்ன? காலனே அவளை எனக்கு அளித்து அன்றிரவில் அந்த மணல் மேட்டில் அவளையும் என்னையும் ஒன்று சேர்த்திருக்க, எங்களை மணஞ்செய்விக்க வேறு உபாத்தியாயர் வேண்டுமோ?"

ஹேமநளினிக்கும் இராமேசனுக்கும் இடையில் அநேக இடையூறுகள் உண்டாயினவே! இத்தனை இடையூறுகளையும் கடந்து இவ்வளவு சந்தேகங்களையும் போக்கடித்து அவமானத்தையும் விலக்கி அவள் முன் தலைதூக்கி நிற்க எவ்வளவு பாடுபட்டு கஷ்டப்படவேண்டும், என்று நினைக்கவே அவன் மனம் நடுக்கமடைந்தது. ஜயம் வருமோ, தோல்விதான் கிட்டுமோ? தான் நிரபராதி என்றும் விளக்கிக்காட்டுவது எப்படி? நிரபராதி என்று விளக்கிக்காட்டினும் ஊரார் ஒப்புவாரோ?" கமலாவின் கதி என்னவாகும் என்ற எண்ணம் எழும்பவே, "இது முடியாத காரியம்! இப்படிப் பயந்து தயங்குவது கமலாவை மனைவி என்று கொள்ளவேண்டுமே யொழிய வேறில்லை. ஹேமநளினி என்னை அவமதிப்பாள் அப்படி அவமதித்து வேறு யாரையேனும் கணவனாக ஏற்பினும் ஏற்பாள் என்று இவ்விதம் ஹேமநளினியோட்டி தான் கொண்டிருந்த ஆசைகளை காற்றில் பறக்கவிட்டு பெருமூச்செறிந்தான் இராமேசன்.

---

## சன்மார்க்க அஷ்டகம்.

[K. N. சிவராஜ பிள்ளை.]

"சரண கமலாலயத்தில்" என்னும் மெட்டு.

(1) சாற்று மொழி மெய் தருமம் தந்திடும்
ஓர் சிந்துவெனத்
தூற்று மொழியான பொய்மை—
அகல்வேமோ?
வேற்றுமை யில்லாதெவரும்
போற்றுவதற்கான பெரும்
மாற்றங்களையே நெடிதும்—
புகல்வேமோ?

(2) ஆதரவில்லாக்குடிவி மாதர்களின் மீதுபுரி,
தீதியல் அநீதிகளை—விடுவேமோ?
சோதர சிநேகம் இன்றிப் பாதகர்
எனப்பழித்த
சாதுகை கீழ் மாந்தர் தமைத்—
தொடுவேமோ?

(3) வஞ்சகம் படம் நிறைந்த நெஞ்சினராய்,
கெஞ்சினவர்
வாட்டும் மனவன்மைதனை— அடர்வேமோ?
துஞ்சுதலிலாக் கருணை ரஞ்சிதம்
என்றே மதித்து
தூயநெறி யாயதென்றே—
தொடர்வேமோ?

(4) அகல் மயக்கக் கடலில் அச்சம் பகைமை
எனும் அலையடிப்ப
அகம் உடைந்து மதிசிதறக் —குலைவேமோ?
புகறலரிதானவென்றிபுணரவரும்வீரமெனும்
புனித குணம் மேலதென்று—
மிலைவேமோ?

(5) உடல் ஊட்டும் ஊணெனவே, உயிர் ஊட்டி வளர்ப்பதுவும்
உலப்பில் சுதந்திரம் என்றே—அறியேமோ?
அடல் ஊட்டி அடைந்தார் அவ் அரிதான சரிதநிலை
அஃதடைதல் வேண்டுமெனக்-குறியேமோ?

(6) அவ்வுலக வாஞ்சையில் இவ் அகிலம் உடல் உயிர் வெறுத்து
யாவுமே பொய்யென்ற உரை—தள்ளேமோ?
இவ்வுலகம் மெய்யதென்றும் இயலும் உயிர் மெய்யதென்றும்
இயற்று தொழில் மெய்யதேன்றும்—கொள்ளேமோ?

(7) வள்ளுவர்தம் தெள்ளுதமிழ் கொள்ளவரும் உண்மைகளை
வையகத்தார் உய் நெறியாய்—மதியேமோ?
எள்ளுதலிலாதவினை இயற்றி உப சாந்தநிலை
ஏறி அதன் மேன்மைதனைத்—துதியேமோ?

(8) எரி கிரணம் முன் பனி போல் இழி குணங்கள் ஆனவெல்லாம்
எமை அகலவே எரித்துத்—தீர்வேமோ?
திரிகரண சுத்தி என்று வருகிற அத்தொன்மைவிதி
தருகிற சன் மார்க்க நெறி—சார்வேமோ?

——:(o):——

ஒத்துழையாமை
இதர தேசங்கள் வெற்றி பெற்ற விவரம்.

ஒத்துழையாமை என்னும் தெய்வீக இயக்கத்தின் விசேஷத்தை உய்த்துணராத சிலர், இந்த இயக்கத்தை மேற்கொண்டு அதிகாரி வர்க்கக் கோட்டையைத் தகர்த்து சுயராஜ்யக் கொடி நாட்ட முடியுமா வென்று சந்தேகப்படுகின்றனர். அத்தகையோரும் சரி, பிறரும் சரி, அவ் வியக்கத்தின் விசேஷத்தை அறியவேண்டி, ஹங்கேரி தேசம் அவ்வியக்கத்தைச் சாதனமாகக் கொண்டு, ஆஸ்டிரியாவின் ஆதிக்கத்தைப் போக்கி, சுயராஜ்ய வாழ்வு பெற்ற விருத்தாந்தமும், ஜப்பானியர் சொல்லவொண்ணாத கொடுமை யியற்றியும் கொரியாவும் குடியரசுக் கொடி நாட்டும் விவரமும், இந்நூலிலே எளிய இனிய தமிழ் நடையில் சிறுவரும் சிறுமியரும் உணருமாறு சுருங்கச்சொல்லி விளங்கக் கூறப்பட்டுள்ளன.

இதன் விலை அணு 0—4—0

கணேஷ் கம்பெனி,
39, தம்பு செட்டி தெரு, சென்னை.

புத்தக விளம்பரங்கள்.
சுதேசமித்திரன் புத்தகசாலை.

உதயலன்.
என்கிற கொற்கைச் சிங்களவன்.

ஷேக்ஸ்பியர் மகாகவி ஆங்கிலபாஷையில் எழுதியுள்ள "ஒதெல்லோ என்கிற வெனிஸ் மோரியன்" என்னும் ஓர் அருமையான நாடகம். அ. மாதவையா அவர்கள் மொழிபெயர்த்தமைத்தது.
விலை அணு 12.

பத்மாவதி சரித்திரம்.

ஸ்ரீமான் அ. மாதவய்யா, பி.ஏ., எழுதிய அருமையான நாவல். புதிய பதிப்பு 1 படங்களுடன் கூடியது. இந்நூல் அலங்காரமாய் அநேக பழமொழிகளை அணிந்து சில மதுரமான கவிகளை உள்ளடக்கி, சிறுவர் சிறுமிகளும் எளிதிற் படித்தறியும்படியான தமிழ் நடையில் உள்ளது.
விலை ரூ. 2.

வர்த்தகயுக்தி.

வியாபார சம்பந்தமான விஷயங்கள் கொண்டது. ஒவ்வொரு தொழிலாளியும் அவசியம் படிக்க வேண்டிய நூல். இதனை மெச்சிப் புகழாத பத்திரிகைகள் கிடையா. முதற் பதிப்பு விளம்பரமின்றி விற்பனை. இரண்டாம் பதிப்பு பத்திரிகையில் விளம்பரம் செய்த ஒரு வாரத்துக்குள் விற்பனை. இது நான்காம் பதிப்பு. விலை அணு 6.

கதாமாலிகா.

இது ஒரு கதைக் களஞ்சியம்.

வி. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய விநோதக் கதைகளும், விசித்திரங்களும், பொதிந்து கிடக்கின்றன. கதா விநோதம், 33-விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. —— விலை ரூபா 1.

மானேஜர், சுதேசமித்திரன்,
சென்னை.

இனும்! இனும்!!
ஒவ்வொரு பக்கமும்
சரீர சுகத்தைப்பற்றி
போதிக்கிற தென்பதை
நமது
காம சாஸ்திரம்
என்னும் புஸ்தகத்தைப் படிப்பதால் அறியலாம். தேகத்தைப் பாதுகாப்பதற்கு அனுபவத்துக்கு ஒத்துள்ள நீதி வாக்கியங்கள் நிறைந்து கிடக்கின்றன.

உங்கள் விலாசத்தை தெரிவித்தால் தபாற் செலவின்றி இனமாய் அனுப்புகிறோம்.

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ,
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
தபால் பெட்டி நெ. 1252,
26, பிராட்வே, மதராஸ்.

சுதேசியமானது! உபயோகமுள்ளது!!

# அமிர்தாஞ்சனம்

## எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய் புதுதலைநோய் இரட்டுவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒற்றைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

| படைமருந்து | பற்பொடி | யோஹிநி தைலம் |
|---|---|---|
| டப்பி 1-க்கு | டப்பி 1-க்கு | டப்பி 1-க்கு |
| 0—6—0 | 0—2—0 | 0—12—0 |

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.



## ஜனரஞ்சனி.

ஒரு உயர்தர மாதாந்தர தமிழ் பத்திரிகை தமிழ் இலக்கியம் தேச சரித்ரம், சாஸ்த்ரங்கள், மதசம்பந்தமான விஷயங்கள், நாவல்கள், சிறு கதைகள், ஹாஸ்யங்கள், விநோதவிஷயங்கள் முதலிய வாசிக்க ரஸமானபல வியாஸங்கள் அடங்கியது.

| | | | |
|---|---|---|---|
| வருஷ சந்தா ரூபாய் | 2 | 0 | 0 |
| மேல் நாடுகளுக்கு ரூபாய் | 3 | 0 | 0 |
| மாதிரிப்பிரதி அணு | 0 | 2 | 0 |

"ஜனரஞ்சனி" ஆபீஸ்,
4, கொண்டிசெட்டி தெரு மதராஸ்



## The United India Life Assurance Co., Ltd.

**Head Office: Madras**

(Established 1906)

இந்தியர் நிர்வாகத்திலிருக்கும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி சென்னையில் இதொன்றே. உயிரின் நிலையில்லாமையை நினைத்து, நம் தமிழ் நாட்டார் யாவரும் இக்கம்பெனியில் சந்தாதாரராக நலம் பெறுவாராக. சென்ற வருஷத்தில் கிடைத்துள்ள லாபத்திலிருந்து ரூ. 1000 பாலிஸிக்கு ரூ 15 வீதம் சந்தாதாரர்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது. ஏஜெண்டுகள் தேவை.

Apply to:—K. S. Gopalayya,
MANAGER.



கதர்! கதர்!! கதர்!!! ஸ்ரீ பண்டார் சுத்த சுதேசிய உடை!!!

பெயர்பெற்ற மோராதாபாத் கதர் உடைகளின் நிலயம்.

விலை வெகு குறைவானது. இந்தியா, பர்மா, சிலோன் எங்கும் சுதேசிய பண்டகசாலைகளுக்கு நாங்களே கதர் உடைகள் மொத்தமாய் அனுப்புகிறோம். ஓர்முறை வாங்குபவர் நீடித்து எங்களிடமே வியாபாரம் செய்வார்கள்.

கதர் துணிகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| நெ. 1. | 10 கஜம் × 25" | ரூ. 2½ முதல் | ரூ. 3 வரை |
| ,, 2. | 12 ,, × 27" | ,, 4 | ,, 6 ,, |
| ,, 3. | 16 ,, × 34" | ,, 6 | ,, 9 ,, |
| ,, 4. | 18 ,, × 36" | ,, 8 | ,, 12 ,, |
| ,, 5. | 20 ,, × 41" | ,, 11 | ,, 13 ,, |

வெளுக்கப்படாத கதர் உடைகள் பீஸ் ஒன்றுக்கு கால் ரூபாய் குறைவாக கிடைக்கும். ஆர்டருடன் முன்பணமாக 4ல் 1 அனுப்பவேண்டும்.

தந்தி விலாசம்: 'Shree.'

கதர் சேலைகள் முதலியன.

| | | | |
|---|---|---|---|
| 10 கஜம் × 45" | ரூ. 4½ முதல் | ரூ. 6 வரை |
| 9½ ,, × 40" | ,, 3 ,, | 5 ,, |
| 3 ,, × 1½ கஜ | ,, 2 ,, | 3 ,, |

எங்களிடம் கிடைக்கும் வேறு பலவித சுதேசிய துணிகளின் விலை விபரங்களை எழுதிக் கேட்டறிந்துகொள்ளலாம்.

SHREE BANDAR,
Mandi Bans Street,
Moradabad, U. P.



## ஒற்றுமை.

(நான்காம வருடம்.)

இது இந்திய மக்களிடம், சகோதர நட்பு, சமரச உணர்ச்சி, ஜீவகாருண்யம், உயர்தர அறிவு நற்குண நல்லொழுக்கத்தைப் போதிக்கும் விஷயங்கள், நாவல்கள், சரித்திரங்கள் முதலியன அடங்கிய ஒரு மாதாந்தரப் பத்திரிகை.

வருஷச் சந்தா முன் பணம் அனுப்புவோருக்கு அணு 12.
ஜீவிய சந்தா ரூபாய் 10-0-0.
வி. பி. மூலமாய் பெறுவோருக்கு ரூ. 1
வெளி நாட்டுக்கு ரூ. 1-8-0.

பி. வி. கண்ணன் அண்டு கோ.
சைதாப்பேட்டை சென்னை.



## லக்ஷ்மிகாந்த கஸ்தூரி மாத்திரை.

இஃது சிறந்த ஆயுர்வேத ஔஷதங்களில் ஒன்று மிக்க அருமையான மருந்துகளால் முடிவு பெற்று வாய்வு, பித்த சிலேஷ்மத்தை அனுசரித்து வியாதிகளுக்கு தனியாக அல்லது தாம்பூலத்திலாவது உபயோகிக்க தகுந்த சஞ்சீவி.

சுமார் 200 மாத்திரைகள் அடங்கிய புட்டி 1-க்கு விலை அணு 6.
டஜன் 1-க்கு விலை ரூ. 4.

ஸ்ரீ நடராஜ ஔஷத சாலை.
55, Narayana Mudali, Street,
G. T. MADRAS.